# ஆசிரியர் மடல்



நேசமிகு சூசையப்பரின் பாசமிகு இறைமக்களே!

நம் பாதுகாவலர் புனித சூசையப்பரின் ஆலய ஆண்டுத் திருவிழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றமைக்காக முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறும் இவ்வேளையில், இறைமக்கள் அனைவரின் ஒத்துழைப்பும், பங்கேற்பும் மறக்க முடியாததாக அமைந்ததன் பெருமகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன், இதன் பொருட்டு உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

எளிமையையும், தாழ்ச்சியையுமே தம் இதயத்தில் நிறைத்துக்கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க பணிவாழ்வு வாழ்ந்து மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்வோம், முடிவில்லாத இளைப்பாற்றிக்காகச் செபிப்போம். ஆண்டவர் இயேசுவால் துவக்கி வைக்கப்பட்ட திருஅவையின் 267-வது திருத்தந்தையாகப் பொறுப்பேற்றுள்ள புதிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். உலகமெங்கும் நெருக்கடி தொடர்ந்திருக்கும் இவ்வேளையில் தூய ஆவியாரின் துணையோடு திருத்தந்தையின் தலைமையும் வழிநடத்துதலும் சிறப்பாக அமைந்திட செபங்களை ஏறெடுப்போம்.

இவ்வாண்டு 10, 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் நம் பங்கிலுள்ள பிள்ளைகளின் தேர்ச்சி விகிதம் பாராட்டுக்குரியதாக உள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. துவங்கியிருக்கும் புதிய கல்வி ஆண்டில் பெரியோர் பெற்றோர் வழிகாட்டுதல்படி சரியான தீர்மானத்தோடும் திட்டமிடுதலோடும் பிள்ளைகள் கல்வியில் கருத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

விடுமுறை விவிலிய வகுப்புகளில் (VBS) ஆர்வமுடன் பங்கேற்ற 275 பிள்ளைகளுக்கு வாழ்த்துகள். இவ்வாண்டின் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளில் பிள்ளைகள் தவறாது கலந்து கொள்ளவும், பெற்றோர்கள் சிரமம் பாராமல் பிள்ளைகளை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

நம் இந்தியத் திருநாட்டின் பாதுகாவலரான திருத்தூதர் புனித தோமாவை ஆண்டு தோறும் ஜுலை 3-இல் நினைவு கூர்கிறோம். புனிதர் கொண்ட விசுவாசமும், நம்பிக்கையும் நம் வாழ்விலும் உயிரோட்டத்துடன் உள்ளதா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நம்பிக்கை குறைபாடு என்பது ஆன்மிகத் தளர்ச்சிக்கான அறிகுறி என்பதால் விசுவாசத் தளர்வு இல்லாமல் காத்துக் கொள்ள வேண்டியது இறைமக்களின் கடமை.

ஆகஸ்ட் 15 நம் பங்கில் சிறப்பான நாளாக அமையவிருக்கிறது. அன்று நம் அன்னையின் விண்ணேற்பு தினம் மற்றும் நாட்டின் விடுதலை தினம் ஆகியவற்றைச் சிறப்பிக்கவுள்ள நமக்கு, அன்றைய தினத்துக்கு மகுடம் வைத்தாற் போல் நமது பாசமிகு ஆயர் மேதகு நீதிநாதன் அவர்கள் தலைமையில் பங்கின் பிள்ளைகள் முதல் திருவிருந்து மற்றும் உறுதிப்பூசுதல் பெறுகிறார்கள் என்பது சிறப்புச் செய்தியாகிறது. இறைமக்கள் அனைவரும் ஆயர் அவர்கள் நிறைவேற்றும் திருப்பலியில் பங்கேற்று விழா நாளைச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறேன்.

நம் தாய் மரியன்னையின் பிறப்பு விழா செப்டம்பர் 8 அன்று சிறப்பிக்கப்படுகிறது. வாழ்நாள் முழுக்க அன்னை நமக்குப் பரிந்துரை செய்கிறார் என்பதை நாம் செபிக்கும் செபமாலையின் நற்பயன்கள் நமக்கு உணர்த்துகின்றன. அன்னையின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

நம் பங்கில் அன்பியச் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளன. அன்பியக் கூட்டங்களிலும் மக்கள் ஆர்வமுடன் பங்கேற்பதைக் காண்கிறேன். ஒருங்கிணைந்த இறைச்சமூகமாய் நாம் வாழ அடிப்படையான அன்பியக் கூட்டங்களில் மேலும் இறைமக்கள் ஆர்வமோடு பங்கேற்க வேண்டுகிறேன்.

பங்கு மண்டபத்தின் மேல்தளத்தை சீரமைக்கவும், மின்தூக்கி (Lift) அமைக்கவும் உதவி புரிந்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி கூறி பாராட்டுகிறேன்.

ஓர் ஆண்டுக்காலம் நம் பங்கில் உதவி பங்குத்தந்தையாக சிறப்பாகப் பணி செய்து மாற்றல் பெற்ற அருட்பணி. மார்ட்டின் OMD அவர்களுக்கு பங்கின் சார்பாக நன்றி கூறுகின்றேன். உதவி பங்குத்தந்தையாக புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அருட்பணி. டேவிட் மதிவாணன் அவர்களை வரவேற்போம், அவர் பணி சிறக்க வாழ்த்துவோம்!

பாசமுடன்

அருட்பணி. **தாமஸ் பிரேம்குமார்** பங்குத்தந்தை

அருட்பணி. **டேவிட் மதிவாணன்** உதவி பங்குத்தந்தை



As we begin by thanking God for the grand and grace-filled celebration of our parish patron, St. Joseph's annual feast, I share my heartfelt joy with you all. The wholehearted cooperation and participation of each one of you made the celebration truly memorable. For this, I extend my sincere thanks and appreciation to you all.

Let us gratefully remember Pope Francis, who lived a humble and simple life and served with historical significance, and let us pray that he continues to be strengthened without ceasing. We also thank God for our new Holy Father, Pope Leo XIV, the 267th successor of St. Peter, chosen by Jesus to lead the Holy Church. In these trying times around the world, let us lift our prayers so that the Holy Spirit may guide and strengthen him in his leadership.

It brings great joy to share the wonderful news that our parish children have achieved commendable results in the 10th and 12th standard public exams this year. As the new academic year begins, I urge children to focus on their studies with determination and planning, guided by the counsel of parents and elders.

Congratulations to all 275 children who enthusiastically participated in this year's Vacation Bible School (VBS). I request that all children actively attend this year's Sunday catechism classes without fail and that parents make every effort to ensure their children's presence in these classes.

We commemorate St. Thomas the Apostle, the patron of India, every year on July 3rd. Let us reflect on whether we live out the faith and trust that St. Thomas exemplified. A lack of faith is a sign of spiritual weakness, and so we, as believers, must guard ourselves against wavering in our faith.

August 15 is going to be a very special day in our parish as we celebrate both the Assumption of our Blessed Mother and India's Independence Day. On this joyful occasion, under the leadership of our beloved Bishop, Most Rev. Neethinathan, children of our parish will receive their First Holy Communion and Confirmation. I warmly invite all parishioners to take part in the Holy Mass celebrated by our Bishop and make this feast day a special one.

The Nativity of our Blessed Mother is celebrated on September 8. Throughout her life, she intercedes for us. The benefits of praying the Holy Rosary make us realize this. Let us thank God for the blessings we have received through our Mother Mary.

Our Parish's Anbiyam (Basic Christian Communities) activities are going well. It is encouraging to see many actively participating in the Anbiyam meetings. I request even greater participation so that we may continue to grow as a united spiritual community.

I thank and appreciate all the generous-hearted people who helped in the renovation of the upper floor of the parish hall and in setting up the elevator (lift).

I also extend our heartfelt thanks, on behalf of the parish, to Fr. Martin OMD, who served wonderfully as assistant parish priest for the past year and has now been transferred. Let us warmly welcome Fr. David Madhivanan, who has newly taken charge as the assistant parish priest, and pray for his fruitful ministry.



*God Bless You.with Love,*

**Fr. Thomas Premkumar**
Parish Priest

**Fr. David Madhivanan**
Asst.Parish Priest

## புனித யோசேப்பும் மறைந்ததிருத்தந்தை பிரான்சிசும்

**– ரோனா ஆல்பர்ட்**



சிறுவயது முதலே இறைமகன் இயேசுவின் இவ்வுலகத் தந்தை புனித யோசேப்பு மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர் மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ். இதை எண்பிக்கும் வகையில் திருத்தந்தை பிரான்சிஸ் தலைமைப்பணி ஏற்ற நாள் 2013, மார்ச் 19 புனித யோசேப்பு பெருவிழா நாள் அவர் மனத்துக்கு ஏற்றபடி அழகாகவும், பொருத்தமாகவும் அமைந்தது. ஒரு திருத்தந்தையாக பின்னாட்களில் புனித யோசேப்பு பக்தி முயற்சிகளை அனைத்துலகுக்கும் வளர்த்தெடுக்கும் செயல்பாடுகளுக்கு முன்னோட்டமாகவும், புனித யோசேப்புக்கும் அவருக்கும் உள்ள நெருக்கத்தைக் கட்டியம் கூறும் சாட்சியமாகவும் திருத்தந்தை பிரான்சிசின் தலைமைப் பணி ஏற்பு நாள் அமைந்தது.

**பாதுகாப்பதில் புனித யோசேப்பின் பங்கு**

புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் நடைபெற்ற தலைமைப் பணி ஏற்பு விழாவை எளிமையான விதத்தில் கொண்டாடிய திருத்தந்தை, விழாவின் மையப் பொருளாகத் தேர்வு செய்தது புனித யோசேப்பு திருக்குடும்பத்தின் பாதுகாவலர், திருஅவையின் பாதுகாவலர் என்பதாகும். அன்றைய திருப்பலியில் **பாதுகாத்தல்** என்பதை மையக் கருத்தாகக் கொண்டு திருத்தந்தை ஆற்றிய மறையுரை அவர் புதிதாக ஏற்றுக்கொண்ட மிகப்பெரும் பொறுப்புக்கு புனித யோசேப்பின் பாதுகாவலையும், துணையையும் நாடுவதாக அமைந்தது.

தமது மறையுரையில் புனித யோசேப்பின் விழா நாளன்று பணி ஏற்பு நடப்பதன் பொருத்தத்தைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ், இறைஇயேசுவுக்கும், அன்னை மரியாவுக்கும் பாதுகாப்பளித்து அவர்களைப் பேணிக்காத்தவர் புனித யோசேப்பு, எனவே பாதுகாத்தல் என்பது திருஅவைக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மிக முக்கியமானது எனத்தெரிவித்தார். மேலும், உலக நாடுகளின் ஆட்சியாளர்கள் புனித யோசேப்பைப் போன்று மக்களைப் பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். உலகில் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பொறுப்பு மிக்க பதவியில் இருப்பவர்கள் கடவுளின் படைப்புலகு குறித்து அக்கறை கொண்டிருக்க வேண்டும், உலக மக்களும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் ஆர்வம் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். உலகத் தலைவர்களும் குழந்தைகளை, முதியோர்களை, துன்பத்தில் உழல்வோரை பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள் என்பதை வலியுறுத்தினார். திருத்தந்தையின் இறையியல் பார்வையில் திருஅவை மற்றும் மனிதர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் புனித யோசேப்பின் பாதுகாப்பு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பது தெளிவுபடுத்தினார். உறங்கும் நிலையிலும் ஓர் அமைதியான புனிதராக யோசேப்பு திருக்குடும்பத்துக்கும், திருஅவைக்கும் பாதுகாவலராகத் திகழ்கிறார் எனத் தெரிவித்தார்.

**புனித யோசேப்புடன் நெருக்கமானவர்**

திருஅவையின் வரலாற்றில் குழப்பம் மிகுந்த ஒரு காலகட்டத்தில் திருத்தந்தை 9-ம் பத்திநாதர், திருஅவையை புனித யோசேப்பின் பாதுகாவலில் வைக்க விரும்பினார். எனவே 1870-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ம் நாள், புனித யோசேப்பை கத்தோலிக்கத் திருஅவையின் பாதுகாவலர் என அறிவிப்புச் செய்தார். எப்பொழுதும் கன்னியான மரியாவின் மிகத் தூய்மையான கணவராகவும், இறைமகனை சிறந்த முறையில் வளர்ப்பவராகவும்,

திருக்குடும்பத்தின் தலைவராகவும் தேர்ந்து கொள்ளப்பட்டதன் காரணமாக இயேசுவால் கட்டியெழுப்பப்பட்ட திருஅவைக்கு புனித யோசேப்பு பாதுகாவலராக கிறிஸ்துவின் பிரதிநிதியான திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டார்.

இவ்வாறு புனித யோசேப்பு உலகளாவிய திருஅவையின் பாதுகாவலர் என்று அறிவிக்கப்பட்டதன் 150-ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் புனித யோசேப்பு யூபிலி ஆண்டினை 2020 டிசம்பர் 08 அன்று துவக்கினார். அன்று அவர் வெளியிட்ட **Patriscorde** அதாவது, "ஒரு தந்தையின் இதயத்தோடு" என்ற தலைப்பில் அமைந்த திருத்தூது மடல் மூலமாக அவரும் புனித யோசேப்பும் திருஅவையின் திருத்தந்தை மற்றும் திருஅவையின் பாதுகாவலர் என்ற முறையில் ஒருவருக்கொருவர் நெருக்கத்தில் இருப்பது வெளிப்பட்டது. புனித யோசேப்பின் யூபிலி ஆண்டில் சிறப்பு பேறு பலன்களை அறிவித்த திருத்தந்தை "புனித யோசேப்பே, ஒரு தந்தையாக வாழும் வாழ்வுப் பாதையை எமக்குக் காட்டியருளும். இரக்கமும், துணிவும் நிறைந்த அருளை எமக்குப் பெற்றுத் தாரும்" என்ற செபத்துடன் தம் மடலை நிறைவு செய்தார்.

**புனித யோசேப்பிடம் பக்திப் பற்றுதல்**

இறைவனின் தாய் மரியாவிடமும், புனித யோசேப்பிடமும் திருத்தந்தை பிரான்சிஸ் குழந்தைத்தனமான பாசம் கொண்டிருந்தார். அந்தப் பாசமே துன்ப முடிச்சுகள் அகற்றும் அன்னை மற்றும் உறங்கும் நிலை யோசேப்பு ஆகியோரின் பக்தியை திருஅவையில் வளர்க்கச் செய்தது. 19-ஆம் நூற்றாண்டில் இயேசு - மரியா துறவு சபை பிரெஞ்சு மொழியில் வெளியிட்ட புனித யோசேப்பு பக்தி முயற்சிகள் என்ற பழமையான நூலிலுள்ள செபத்தை திருத்தந்தை பிரான்சிஸ் ஒவ்வொரு நாளும் தவறாமல் செபித்து புனிதரிடம் தமக்குள்ள நேசத்தில் நிலைத்தார். மேலும் தம்முடைய ஆட்சி முத்திரையில் புனித யோசேப்பைக் குறிக்கும் லீலி மலரை இடம்பெறச் செய்தார். அவர் தலைமைப் பணியேற்ற அதே ஆண்டிலேயே புனித யோசேப்பின் பரிந்துரையை நாடும் விதத்தில் அனைத்து நற்கருணை மன்றாட்டுகளிலும் புனிதரின் பெயரையும் இணைத்தார். உறங்கும் நிலை புனித யோசேப்பின் பக்தி உலகம் முழுக்கப் பரவுவதற்கு திருத்தந்தையின் இந்த அனுபவமே காரணமாயிற்று.

புனித யோசேப்பு குறித்த சிந்தனைகளை அடிக்கடி பகிர்ந்து கொள்ளும் வழக்கம் உள்ளவராக திருத்தந்தை விளங்கினார். புனித யோசேப்பை ஒரு தந்தையாகவும், இயேசுவின் வளர்ப்பாளராகவும், மரியாவிடம் பக்தி செலுத்துபவராகவும் போற்றிய திருத்தந்தை, திருஅவையில் புனித யோசேப்பு ஒரு முக்கிய பங்கு வகிப்பதாக நம்பிக்கை கொண்டிருந்தார். மக்களால் அதிகம் கவனிக்கப்படாதவராய், அதேவேளை காலமறிந்து செயல்படுகிறவராய் மறைவாழ்வு வாழ்ந்தாலும், மீட்பு வரலாற்றில் எவரோடும் ஒப்பிட முடியாத செயல் வீரராக அவர் விளங்கினார் என்றும், இதனாலேயே கிறிஸ்தவ மக்களால் புனித யோசேப்பு எப்போதும் அதிகம் அன்புகூரப்படுகிறார் என்பதிலும் உறுதியாக இருந்தார்.

**புனித யோசேப்பிடம் பெற்ற படிப்பினைகள்**

புனித யோசேப்பிடமிருந்து நாம் அனைவரும் கற்றுக்கொள்வதற்கு பல படிப்பினைகள் உள்ளன என்று திருத்தந்தை பிரான்சிஸ் கருதினார். நாசரேத் தச்சர் யோசேப்பு தமது மனைவி மரியாவை ஏற்றுக்கொண்டது மற்றும் இறைவனின் மீட்புத் திட்டத்தில் நம்பிக்கை கொண்டது போன்ற தம் செயல்களால் உலகம் வேண்டுமென்றே

புறக்கணிக்கும் விஷயங்களை கவனிக்க வேண்டும் என்பதை திருஅவைக்கு நினைவூட்டுகிறார். மற்றவர்கள் நிராகரிப்பதை நாம் மதிக்க வேண்டும் என்பதை நம் ஒவ்வொருவருக்கும் அவர் அறிவுறுத்துகிறார். உலகத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களைக் கவனிக்கவும், அவர்களைப் பராமரிக்கவும் நமக்கெல்லாம் கற்பிக்கிறார். இவ்வுலகில் ஒருவர் தந்தையாகப் பிறப்பதில்லை. அவர் ஒரு குழந்தையின் வாழ்வுமீது பொறுப்பேற்கும் போதே தந்தையாக மாறுகின்றார். தந்தையரால் கைவிடப்பட்ட அனாதைக் குழந்தைகள் நிறைந்துள்ள இன்றைய உலகிற்கு புனித யோசேப்பு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். இப்படிப்பினைகளோடு இயேசுவின் பணி வாழ்விற்குமுன் அவர் வாழ்ந்த இடமான நாசரேத், கடவுளால் முன்னரே புனித யோசேப்பின் பிறப்பிடமாகத் தேர்வு செய்யப்பட்டது என்பது, அதிகம் அறியப்படாத பகுதிகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் மீதுள்ள இறைவனின் விருப்பத்தைக் காட்டுவதாக அமைவதாகவும் திருத்தந்தை குறிப்பிடுகிறார்.

ஒரு மனிதனின் தனிப்பெரும் மாண்பும், மகத்துவமும், அந்த மனிதர் பெற்றுள்ள அரும்பெரும் பண்புகளாலும், அந்த மனிதர் ஏற்றுள்ள பதவி பொறுப்புகளாலும் அவருக்குக் கிடைக்கிறது. அந்த வகையில் இறைவனின் இதயத்துக்கு ஏற்றவராக விளங்கிய புனித யோசேப்பு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நெஞ்சத்துக்கு நெருக்கமானவராக விளங்கினார்.

**புனித சூசையப்பர் ஆலயம்,** மகாலட்சுமி நகர், சேலையூர், சென்னை - 600 073.

**சூசையப்பர் கல்வி நிதி**

நமது பங்கின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் நமது பங்கிலுள்ள ஏழை மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகின்றோம்.

இந்தக் கல்வி ஆண்டிலும் (2025-2026) நமது பங்கிலுள்ள / கல்லூரி மாணவ மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. பள்ளி மாணவ, மாணவியர் | : 71 பேர் | ரூ. 2, 12, 000/- |
| 2. கல்லூரி மாணவ, மாணவியர் | : 24 பேர் | ரூ. 1, 68, 000/- |
| மொத்தம் | : 95 பேர் | ரூ. 3, 80, 000/- |

இந்த நிதியினை வழங்குவதற்காக உதவி செய்த பங்கு மக்களுக்கும், குறிப்பாக கல்விக்காக நிதி உதவி செய்த கீழ்க்கண்ட நன்கொடையாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. திரு. ஆரோக்கியசாமி (புனித 2ம் ஜான்பால் அன்பியம்) | ரூ. | 25, 000/- |
| 2. திருமதி. சகாயமேரி ராஜா (புனித யோவான் அன்பியம்) | ரூ. | 20, 000/- |
| 3. திரு. ஆரோக்கியராஜ் (புனித ஜேம்ஸ் அன்பியம்) | ரூ. | 10, 000/- |
| 4. திரு. ஆர்தர் செல்வம் (புனித அன்னை தெரேசா அன்பியம்) | ரூ. | 5, 000/- |

இன்னும் அதிகமானோர் கல்விக்காக நிதி உதவி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். உங்கள் உதவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றும்.

**பங்குத்தந்தை** மற்றும் **பங்குப்பேரவை**

# திருத்தந்தை 14ம் லியோ



கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் ப்ரவோஸ்ட்! இவரே 14ம் லியோ என்ற சிறப்புப் பெயருடன் நம் கத்தோலிக்க திருஅவையின் 267வது திருத்தந்தையாக இறைவனால் உயர்த்தப்பட்டிருக்கிறார். 69 வயதான இவர் 1955ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் தேதி அமெரிக்க நாட்டில் சிகாகோவிலில் உள்ள இல்லினாய்ஸ் என்னுமிடத்தில் பிறந்தார்.

தந்தை லூயிஸ் மரிய ப்ரவோஸ்ட் இத்தாலி வம்சாவளியைச் சார்ந்தவர். தாயார் மில்ட்ரெட் மார்ட்டினஸ் ஸ்பானிய வம்சாவளியைச் சார்ந்தவர். இளமைப் பருவத்தை அமெரிக்காவில் கழித்த திருத்தந்தை, புனித அகுஸ்தினார் சபையின் இளங்குருமடத்தில் சேர்ந்து கல்வி கற்றார். பின்னர் பென்சில்வேனியாவில் உள்ள வில்லோனோவா பல்கலைகழகத்தில் கல்வி பயின்றார். 1977ம் ஆண்டில் கணிதத்திலும் தத்துவ இயலிலும் பட்டம் பெற்றவர் தொடர்ந்து சிகாகோவிலில் உள்ள புனித அகுஸ்தினார் துறவற இல்லத்தில் துறவறப் பயிற்சி பெற்றார். 1982ம் ஆண்டு ஜுன் 19ம் நாள் குருத்துவ அருள்பொழிவு செய்யப்பட்டார்.

1985ம் ஆண்டு பெரு நாட்டில் பியூராவில் உள்ள சுலுக்கானாஸிற்கு புனித அகுஸ்தினார் சபை மறைப்பணிக்காக அனுப்பப்பட்டார். 1987ம் ஆண்டில் தனது முனைவர் பட்ட ஆய்வறிக்கையை சமர்ப்பித்த திருத்தந்தை, தாம் பிறந்த இல்லினாய்ஸின் ஒலிம்பியா ஃபீல்ட்ஸ் பகுதியின் இறை அழைத்தல் இயக்குநராகவும், மறைப்பணி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். 1999ம் ஆண்டில் சிகாகோவின் அகுஸ்தினார் சபை மறைமாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர். இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் தம் சபையின் தலைவராக முதன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் 2007ம் ஆண்டு இரண்டாம் முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2014ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் நாள் பெருவின் சிக்லாயோ மறைமாவட்ட அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், அதே நேரத்தில் சுஃபார் மறைமாவட்டத்தின் பட்டம்சார் ஆயராகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார். 2018 மார்ச் மாதம் பெரு மறைமாவட்ட ஆயர் மாநாட்டின் இரண்டாவது துணைத்தலைவராகத் தேர்வானார். அதில் அவர் பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராகவும், கலாச்சாரம் மற்றும் கல்வி ஆணையத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

2019–ம் ஆண்டில், திருத்தந்தை பிரான்சிஸ் இவரை அருட்பணியாளர்களுக்கான அவையின் உறுப்பினராகவும், 2020ல் ஆயர்களுக்கான அவையின் உறுப்பினராகவும் இணைத்தார். அதே ஆண்டு ஏப்ரல் 15 அன்று பெருவின் கல்லோ மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார். 2023 ஜனவரி 30 அன்று ஆயர்களுக்கான திருப்பீடத் துறையின் தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பீடச்சங்கத்தின் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

2023ம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று நடைபெற்ற கர்தினால்கள் அவையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், லியோ அவர்களை கர்தினாலாக அறிவித்தார். 2023 அக்டோபர் 4 அன்று நற்செய்தி அறிவிப்புப் பணிகளுக்கான திருப்பீடத்துறை உறுப்பினராக ஆனார். 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவரை கார்டினல் பிஷப் நிலைக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உயர்த்தினார். கான்க்லே என்னும் கூட்டமைப்பில் இருந்த கர்தினால்களில் 5 பேர் மட்டுமே கார்டினல் அதில் இன்றைய திருத்தந்தையும் ஒருவர் என்பது உயர்த்தப்பட்ட 28 மாதங்களுக்குள் கார்டினல் – பிஷப்புகளாக பணிசெய்தனர். அதில் இன்றைய திருத்தந்தையும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. பேராயராக உயர்த்தப்பட்ட 28 மாதங்களுக்குள் கார்டினல் – பிஷப்பாக இவரை திருத்தந்தை பிரான்சிஸ் உயர்த்தினார் என்பது வியப்புக்குரியது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் காட்டிய அவசரம் என்பது கடவுளின் தூண்டுதலின்பேரில் நடந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

புதிய திருத்தந்தை மிகவும் எளிமையானவராகவே தோன்றுகிறார். பல்வேறு மொழிகளைச் சுலபமாகப் பேசுகிற திறமைமிக்க திருத்தந்தையாக விளங்குகிறார். இசையில் புலமை பெற்ற பாடுகிற திருத்தந்தையாக இருக்கிறார். துறவு மடத்தில் கிரகோரியன் இசைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதை பொது வெளியில் செபத்தில் பயன்படுத்துகிறார். இதன்பின் கிரகோரியன் இசைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியினை உரோமை இசைக்கல்லூரி (Sing with the Pope) துவக்கியிருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளுக்குள் புதிய திருத்தந்தை கண்ட வளர்ச்சியைப் பார்த்தால் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நெருக்கமானவராகவே தோன்றுகிறார். புன்னகை பூத்த முகத்தோடு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிகளை புதிய திருத்தந்தை தொடர்கிறார். உலக அமைதி பற்றி, இந்த உலகம் கடவுளின் இல்லம், போர்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், ஏழை எளியவர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கிறார். ஏழைகள், புலம் பெயர்ந்தவர்கள், மற்றும் இறைப்பராமரிப்பு இவைகளி லெல்லாம் திருத்தந்தை பிரான்சிஸ் கொண்டிருந்த கருத்தையே திருத்தந்தை லியோவும் கொண்டிருப்பது தெரிகிறது. இன்றைக்கு உலகத்தின் பேசுபொருளாக இருக்கிற 'பன்முகப் பண்பாட்டு மையத்தின்' மிகச்சிறந்த எடுத்துக்காட்டாய் புதிய திருத்தந்தை திகழ்கிறார். இது கடவுளின் தேர்வு என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

## புனித வனத்து அந்தோணியாரும் புனித பதுவை அந்தோணியாரும்



திருஅவையில் புனித அந்தோணியார் என்ற பெயரில் பல புனிதர்கள் போற்றப்பட்டு வருகிறார்கள். அவர்களில், புனித வனத்து அந்தோணியார் மற்றும் புனித பதுவை அந்தோணியார் இருவரும் முக்கியமானவர்கள்.

**புனித வனத்து அந்தோணியார்**

இருவரில் காலத்தால் முந்தையவர் புனித வனத்து அந்தோணியார். எகிப்து நாட்டிலுள்ள 'கோமா' என்னும் சிற்றூரில் மிக வசதி படைத்த செல்வம் மிக்க குடும்பத்தில் கி.பி. 251ம் ஆண்டு பிறந்த அந்தோணியார் தனது இருபதாவது வயதில் பெற்றோர்களை இழந்தார். அச்சமயத்தில் அவருக்கு ஏறக்குறைய 300 ஏக்கர் நிலம் இருந்தது. அவருக்கு ஒரு தங்கையும் இருந்தார். அவரது பெற்றோர் அவர்களை மிகவும் பக்தியாக வளர்த் திருந்தார்கள். தினமும் தவறாது திருப்பலியில் பங்கெடுத்தார். ஒருநாள் திருப்பலியில் கேட்ட பின்வரும் விவிலிய வசனம் அவரது வாழ்க்கையை மாற்றியது. "இன்னும் ஒன்று உனக்கு குறைவாக உள்ளது. உனக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடு. வானகத்தில் உனக்கு செல்வம் கிடைக்கும். பின்பு வந்து என்னை பின் செல்" (லூக்கா 18:22). இவ்வசனத்தை அடிக்கடி தியானித்த அந்தோணியார், தனது படிப்பை முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்த தங்கையை காப்பகம் ஒன்றில் பாதுகாப்பாக தங்க வைத்துவிட்டு பின் தனது சொத்துக்களை உறவினர்கள் மற்றும் ஏழைகளிடம் கொடுத்துவிட்டு துறவிகள் குழுவில் சேர்ந்து தவ வாழ்க்கையை கி.பி. 271 முதல் கி.பி. 285 வரை மேற்கொண்டார். ஒரு கட்டத்தில் அவர் தன் சகோதரியைச் சந்தித்தார். அவரும் அருள் சகோதரிகள் துறவு குழுமத்தை வழிநடத்தி வருவதைக் கண்டார். பின்னர் பாலைவனம் சென்று பாழடைந்த ஒரு கோட்டையில் தனியாக வாழ்ந்தார். இவரின் வாழ்வால் ஈர்க்கப்பட்ட சிலர், கோட்டையை உடைத்து உள்ளே சென்றனர். பலர் இவரின் சீடர்களாக சேர விரும்பினர். எனவே, நைல் நதிக்கரையில் இரு துறவு மடங்களை (Pispir, Arsinoe) நிறுவினார். கி.பி. 311ம் ஆண்டில் தனிமை வாழ்வைத் துறந்து அலெக்சாந்திரியா நகர் சென்று எகிப்தில் பரவிவந்த ஆரியனிச தப்பறைக் கொள்கைகளுக்கு எதிராகப் போதித்தார். பேரரசன் மாக்சிமுசின் கிறிஸ்தவர்களுக் கெதிரான சித்ரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலளித்தார். மீண்டும் பாலைநிலம் சென்று, கால்சிம் (colzim) மலையிலுள்ள குகையில் வாழ்ந்தார். இவரின் பக்தி முயற்சியை முறியடிக்க சாத்தான் பல வகைகளில் சோதித்தான். பெண் வேடமிட்டு சோதித்தல், தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகளை பாதையில் இட்டு பொருளாசையை தூண்டுதல் போன்ற சாத்தானின் பல சோதனைகளையும் இயேசுவின் பெயரால் தோற்கடித்தார். புனிதரின் 90ம் வயதில் இவ்வளவு காலம் எல்லாவற்றையும் வெறுத்து வனத்தில் தனிமையாக இருந்து தவம் செய்து வாழ்ந்து வருபவர்கள் தம்மைப்போல யாரும் இல்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. அலகையின் இந்த சோதனையிலிருந்து அவரை மீட்க சித்தம் கொண்ட கடவுள், அவரின் கனவில் தோன்றி, அவரை விட அதிக காலம் தவம் செய்து வாழ்ந்து வருகின்ற 115 வயதான புனித வனத்து சின்னப்பரை சென்று பார்க்குமாறு கட்டளையிட்டார். அதன்படி, அவரை சென்று சந்தித்தார். அவரை சந்தித்த பிறகு புனித வனத்து சின்னப்பர் இறைவனடி எய்த, அவரை இரு சிங்கங்களின் துணையோடு அடக்கம் செய்துவிட்டு திரும்பினார். நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த இப்புனிதர் கி.பி. 356ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார். அவர் இறந்தபொழுது அவரது அருகில் இருந்த அமத்தாஸ் (Amathas). மகாரியுஸ் (Macrius) என்ற இரு துறவிகளைத் தவிர வேறு எவருக்கும் தெரியாமல் அவரது கல்லறை இரகசியமாக்கப்பட்டது. இவர் துறவிகளின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

**புனித பதுவை அந்தோணியார்**

ஐரோப்பாவின் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரில் கி.பி.1195 ஆகஸ்ட் 15ம் நாள் தந்தை மார்ட்டின். தாய் மேரி புல்ஹாம் தம்பதியருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் பெர்டினாண்டு என்பதாகும். தமது 15ம் வயதில் புனித அகஸ்டின் துறவற சபையில் சேர்ந்து, அதிபரின் அனுமதியோடு கொயிம்ரா என்னும் இடத்திற்கு சென்று குருத்துவக் கல்வி பயின்று கி.பி. 1219ம் ஆண்டில் தனது 24ம் வயதில் குருப்பட்டம் பெற்றார். மொராக்கோவில் வேத சாட்சிகளாக மரித்த ஐந்து பிரான்சிஸ்கன் சபையாரின் உடல்கள் கி.பி. 1220 பிப்ரவரி மாதம் கொண்டு வரப்பட்டதைக் கண்ட பெர்டினாண்டு, கிறிஸ்துவுக்காக வேத சாட்சியாக மரிக்க வேண்டும் என்ற தாகம் கொண்டு கி.பி. 1221ம் ஆண்டு புனித அகஸ்டின் சபையிலிருந்து விலகி பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து தனது பெயரை அந்தோணி என்று மாற்றிக்கொண்டார். சிறிது காலம் ஆப்பிரிக்காவிலுள்ள இஸ்லாமியருக்குப் போதிக்கச் சென்ற அந்தோணி பின்னர் இத்தாலிக்கு திரும்பி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க போர்லி என்னுமிடத்திலுள்ள பேராலயத்தில் மறையுரை ஆற்ற ஆரம்பித்து மிகச்சிறந்த பிரசங்கியானார். அதன்பின் பதுவை நகரில் திருமறை சார்ந்த பணிசெய்து மறையுரை ஆற்றி வந்தார். அந்நாட்களில் நிலவி வந்த தப்பறைக் கொள்கைகளை எதிர்த்தும், கிறிஸ்தவ கோட்பாடுகளை விளக்கியும் போதித்து வந்தார். அவரின் உரையைக் கேட்கக் கூடிய மக்கள் அமர்வதற்கு ஆலயத்தில் இடம் போதவில்லை. இவர் தமது வாழ்நாளில் பல புதுமைகளை செய்துள்ளார். ஒருமுறை ரீம்னி என்னும் கடற்கரை நகரில் வாழ்ந்த பலர் இவரது போதனையைக் கேட்க மறுத்ததால் இவர் கடற்கரைக்குச் சென்று மீன்களுக்குப் போதித்ததாகவும், மீன்களும் இவரது போதனையைக் கேட்க வரிசையாக வந்து போதனை முடியும்வரை அதே இடத்தில் அசையாது நின்று கேட்டதாகவும் சொல்லப்படுகிறது. மற்றொரு சமயம், திவ்விய நற்கருணையில் கிறிஸ்து இயேசு இருப்பதை நம்பாத யூதர் ஒருவர், பல நாட்கள் உணவு அளிக்காமல் தமது கழுதையை கொண்டு வரும்போது அக்கழுதை தாம் அளிக்கும் உணவை உண்ணாமல் அந்தோணியார் தம் திருக்கைகளில் ஏந்தி வரும் திவ்விய நற்கருணையை வணங்கினால் தாம் அவரது கூற்றை ஏற்றுக் கொள்வதாக கூறியதாகவும், அதன்படி பட்டினி கிடந்த கழுதை அந்தோணியாரின் கரங்களில் திவ்விய நற்கருணையைக் கண்டவுடன் அந்த யூதர் கொடுத்த புல்லை உண்ணாமல், திவ்விய நற்கருணையை மண்டியிட்டு வணங்கியதாகவும் சரித்திர நிகழ்வு உண்டு. ஒருமுறை இவர் தனது நண்பரின் அறையில் தங்கியிருந்தபொழுது கிறிஸ்து இயேசு சிறு குழந்தையாக இவரது கரங்களில் தவழ்ந்ததை தான் கண்டதாக இவரது நண்பர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அவர் எண்ணற்ற புதுமைகளை செய்து வருபவராதலால் அவர் **கோடி அற்புதர்** என்று புகழப்படுகிறார். இயேசுவின் பெயரால் பேய்களை ஓட்டுவதில் வல்லவராக இருந்ததால், இன்றளவும் புனித அந்தோணியார் ஆலயங்கள் பலவற்றில் பேய்களை விரட்டும் நிகழ்வுகள் புதுமைகளாகத் தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

பல ஊர்களில் மறையுரையாற்றியதாலும், தொடர்ந்து கடும் தவ முயற்சிகளை மேற்கொண்டதாலும் நோய்வாய்ப்பட்ட இவர் கி.பி.1231ம் ஆண்டு ஜுன் 13ம் நாள் தமது 36வது வயதில் இறைவனடி சேர்ந்தார். அதன்பின் 32 ஆண்டுகளுக்குப்பின் கி.பி. 1263ல் அவரது கல்லறை தோண்டப்பட்டு அவரது நாக்கு மட்டும் அழியாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு பதுவை நகர் கோவிலில் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவர் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் பிறந்தாலும், இறந்து அடக்கம் செய்யப்பட்டது பதுவை நகரில் என்பதால் இவர் புனித பதுவை அந்தோணியார் என்று அழைக்கப்படுகிறார். கி.பி. 1946ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் புனித அந்தோணியாரை திருஅவையின் மறை வல்லுநர்களில் ஒருவராக அறிவித்தார்.

கிறிஸ்து இயேசுவுக்காக வாழ்ந்து மறைந்த இவ்விரு புனிதர்களின் வாழ்க்கையை பின்பற்றி நாமும் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ முயற்சிப்போம்.

திரு. **S. ஆரோக்கியசாமி.** இரண்டாம் ஜான்பால் அன்பியம்

# கார்மேல் அன்னை



இஸ்ரயேலில் மத்திய தரைக்கடல் ஓரத்தில் தென்கிழக்காக 1792 அடி உயரத்தில் அமைந்துள்ள மலைத்தொடர்தான் கார்மேல் மலை. இதன் அடிவாரத்தில் **Haifa** என்ற நகரமும் உண்டு. இந்த மலை பசுமையான பைன் (Pine) மரங்களையும் ஓக் (Oak) மரங்களையும் கொண்ட செழுமையான மலையாகும். பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்தே இந்த மலை ஒரு புனித மலையாகப் போற்றப்படுகின்றது. (1அர.16:2932) இஸ்ராயேலை ஆட்சி செய்து வந்த ஓம்ரியின் மகன் ஆகாபும் அவன் மனைவி ஈசபேலும் பாகால் பொய் தெய்வத்தை வழிபட்டனர். அதனை தீர்க்கதரிசி எலியா கண்டித்தார். நாட்டில் கடும் பஞ்சம் நிலவியது. எலியா ஆகாபையும் பாகாலின் நானூற்றைம்பது பொய் இறைவாக்கினர்களையும் அசேராவின் நானூறு பொய் இறை வாக்கினர்களையும் கார்மேல் மலைக்கு வரவழைத்தார். (1 அர. 18 : 38–45) எலியா அமைத்த பலிபீடத்தில் மட்டும் ஆண்டவரின் தூய நெருப்பு இறங்கி வந்து எலியா ஒப்புக் கொடுத்த பலியை சுட்டெரித்தது. பொய் இறைவாக்கினர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். எலியாவின் சீடர் எலிசா கார்மேல் மலையில் ஆண்டவரின் வல்லமையால் (2 அர. 4 : 25–35) சூனேம் பெண்ணின் மகனை உயிர்த்தெழச்செய்தார். எலியா, எலிசா ஆகிய இரண்டு வல்லமையுள்ள இறை வாக்கினர்கள் செபித்த மலை இந்தப் புனிதமான கார்மேல் மலை. இயேசு கிறிஸ்து உருமாற்றம் அடையும்பொழுது மோயீசனும் எலியாவும் இயேசுவுடன் இருந்ததை புதிய ஏற்பாட்டு நூலில் காண்கிறோம் (லூக்.9:28–36). இறைவாக்கினர் எலியாவின் செபதப ஒறுத்தல்களை முன் மாதிரியாகக் கொண்டு வனவாசிகளும் யாத்ரீகர்களும் எலியா வாழ்ந்த இடத்தில் வாழத் தொடங்கினார்கள். கி.பி. 11 – 12 ம் நூற்றாண்டில் வனவாசிகள் துறவு இல்லத்திற்கருகில் ஒரு ஆலயத்தை அமைத்து மரியாவுக்கு அர்ப்பணித்து அக்கால வழக்கப்படி அந்த இடத்தின் பெயராலேயே கார்மேல் அன்னை ஆலயம் என்று அழைத்தனர். கார்மேல் சபையும் துவங்கப்பட்டது. புனித ஆல்பர்ட் அவோகாட்ரோ ஆயர் (கி.பி. 1149) கார்மேல் சபைக்கு அங்கீகாரம் பெற்றுத் தந்து பணியாற்றினார். ஆனால், அவர் கொல்லப்பட்டு வேதசாட்சி ஆனார். இஸ்லாமிய படையெடுப்பின் காரணமாக வனவாசிகள் இங்கிலாந்து நாட்டிற்கு இடம் பெயர்ந்தனர். சிலுவைப் போர்களுக்குப் பிறகு மீண்டும் கார்மேல் சபையினர் வந்து செபிக்கத் தொடங்கினர். கி.பி. 1251 ம் ஆண்டு புனித சைமன் ஸ்டோக் அவர்களுக்கு அன்னை மரி காட்சி தந்து உத்தரியத்தை வழங்கினார்கள். அதன்பிறகு உலகெங்கும் கார்மேல் அன்னையின் பக்தியும் உத்தரியத்தின் மகிமையும் பரவின.

புனித அவிலா தெரசாவும், புனித சிலுவை யோவானும் திருஅவையின் மறுமலர்ச்சியில் பங்கேற்றவர்கள். இவர்கள், பெண்களுக்கான கார்மேல் சபையை துவக்கினார்கள். பிற்காலத்தில் **Discalced Carmelite Order** என்ற எளிமையான சபையும் துவங்கப்பட்டது. புனித குழந்தை தெரேசா இளம் வயதிலேயே (கி.பி. 1873) கார்மேல் துறவு மடத்தில் சேர்ந்து செபங்கள் வழியே மறைபரப்புப் பணியை செய்து புனிதரானவர். புனித கிளாடி தேலா கொலம்பியரே (St. Claude De La Colombiere) உத்தரியம் அணிவது நம் அன்னை மரியாளிடம் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் பக்தி முயற்சி என்று குறிப்பிடுகிறார். ஒருவர் தன் உத்தரியத்தை இழுந்துவிடக்கூடும். ஆனால், சாகும் தருவாயில் அதை அணிந்திருப்பவர்கள் மீட்படைவார்கள் என்று அருட்பணி. பேரே ரௌல் பயஸ் (Rev. Fr. Pere Raoul Pius. S.J.) என்னும் இயேசு சபை ஆன்மீக எழுத்தாளர் கூறுகிறார். மரியாயின் சேனையார் தங்களின் திருத்தூதுப் பணியில் கார்மேல் மாதா உத்தரியத்தின் பக்தியை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் உத்தரியம் அணிவோம். கார்மேல் அன்னையின் ஆசியைப் பெறுவோம். கார்மேல் அன்னை திருவிழா ஜூலை 16–ம் நாள். புனித கார்மேல் அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்! மரியே வாழ்க!

திரு. I. **ஜோசப் அமல்ராஜ்,** புனித யாகப்பர் அன்பியம்.

# மரியன்னையைப் பற்றிய நான்கு விசுவாச சத்தியங்கள்

**1. மரியன்னை இறைவனின் தாய் :** (எபேசு பொதுச்சங்கம் கி.பி.431ல் வெளியிட்டது)

ஆதியில் இறைவன் ஏவாள் செய்த பாவத்தினின்று நம்மை மீட்க அவரது ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்ப அன்னை மரியாவைத் தேர்ந்தெடுத்தார். 'உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்' என பாம்பாகிய அலகைக்கு சவால் விட்டார். அந்தப் பெண் அன்னை மரியா, 'ஆகட்டும்' என்று இறை சித்தத்தை ஏற்று மீட்பின் வரலாற்றுக் கதவை திறந்து வைத்தார். மரியா தூய ஆவியினால் தம் கன்னிமைக்கு எவ்வித பழுதும் ஏற்படாமலேயே இயேசுவைக் கருத்தாங்கினாள். உருவில்லாத இறைவன் மரியாவின் கருவில் மனித உரு எடுத்ததால் அன்னை மரி இறைவனின் தாய் என அழைக்கப்படுகிறார். இயேசு கடவுளும் மனிதனுமானவர். இறைவனாகிய இயேசு தாயிடமிருந்து மனித சாயலைப் பெற்றார். விவிலியத்தில் புனித லூக்கா அன்னை மரியாவை ஆண்டவரின் தாய் (1 : 43) என்று எலிசபெத்தம்மாள் அழைப்பதை சுட்டிக் காட்டுகின்றார். அந்தியோக்கு ஆயர் புனித இக்னேசியஸ் கடவுளாகிய இயேசு தாவீது குலத்து வித்தாக, தூய ஆவியின் வல்லமையால் கன்னி மரியாவின் வயிற்றில் கருவானார் என்பதை சுட்டிக்காட்டுகின்றார். மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே அன்னை மரியாள் அவர்கள் வல்லமை மிகுந்த பரிந்துரையாளராகக் கருதப்பட்டு 'ஓ! இறைவனின் அன்னையே' என்று அழைத்து மக்கள் மன்றாடுகின்றனர். புனித எப்ரேம் 'படைத்தவரை மகன் என்று அழைக்க மரியாவைத் தவிர வேறு யாருக்கு துணிவு வரும்' என்கிறார். கருவிலே மருவின்றி முழுவதும் தூய்மையான அன்னைமரி, 'இறைவனின்' தாய் என்பதை வலியுறுத்தியும், கான்ஸ்டாண்டிநோபிளின் ஆயரான நெஸ்தோரியுசின் தப்பறையைக் கண்டித்தும் மரியாவை இறைவனின் தாய் என்பதை கி.பி. 431ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் தேதி முதல் 31ம் தேதி வரை நடைபெற்ற எபேசு பொதுச் சங்கம் உறுதி செய்து விசுவாச சத்தியமாக வெளியிட்டது. ஜனவரி முதல் தேதி புத்தாண்டு விழா அன்னை மரி இறைவனின் தாய் என்ற விழாவாகக் கொண்டா டப்படுகிறது.

**2. அன்னை மரியா முப்பொழுதும் கன்னிகை** (கி.பி. 649 லூத்தரன் சங்கம்)

கி.பி.553ல் கூடிய கான்ஸ்டாண்டிநோபிளின் இரண்டாம் பொதுச்சங்கம் அன்னை மரியாளை எப்பொழுதும் கன்னி என்று அழைத்தது. கி.பி. 649ல் நடைபெற்ற லூத்தரன் சங்கம் 'மரியா முப்பொழுதும் கன்னி' என்பதை விசுவாசக் கோட்பாடாக அறிக்கை செய்தது. கான்ஸ்டாண்டிநோபிளின் மூன்றாம் பொதுச்சங்கம் (680–80) இக்கோட்பாட்டை உறுதி செய்தது. மீட்பின் வரலாற்றின் பாலமாகிய அன்னையின் கன்னிமையை வலியுறுத்தியது. திருச்சபையின் மறைபொருளிலே தூய கன்னி மரியா கன்னிமைக்கும் தாய்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றார். ஏனெனில், கணவரையே அறியாத அவர் தூய ஆவி நிழலிடத் தன் நம்பிக்கையாலும், கீழ்ப்படிதலினாலும் இறைத்தந்தையின் மகனையே உலகில் பெற்றெடுத்தார் என்று இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் அறிக்கையிடுகின்றது. கி.பி. 630ம் ஆண்டு திருத்தொண்டராக அருள்பொழிவு பெற்று பின் ஆயராகிய புனித இல்டபோன்சஸ் மரியாவின் கன்னித்தன்மைபற்றி எண்ணற்ற நூல்கள் எழுதியுள்ளார். விவிலியத்தில் லூக்கா 1.26ல், 'கபிரியேல் என்னும் வானதூதரை கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரிலுள்ள ஒரு கன்னியிடம் அனுப்பினார்' என்றார். கபிரியேல் தூதர், 'இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்' (லூக்கா 1 : 31) என்று கூறும்போது, 'இது எப்படி நிகழும்? நான் கன்னியாயிற்றே' (லூக்கா 1 : 34) என்கிறார். சிறு வயதிலிருந்தே தெய்வக்குழந்தையாக வளர்த்த அன்னைமரி, 3 வயதிலேயே ஆலயத்தில் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டு தன் கற்பினை இறைவனுக்கு அர்ப்பணித்த அன்னை மரி, இயேசு பிறக்கும் முன்னும், பிறந்த பின்னும் என்றும் கன்னிகைதான் என்பது அசைக்க முடியாத விசுவாச சத்தியம். இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வருவதற்கு வாசலாக இருந்த அன்னை மரியின் வழியாக இன்னொரு உயிர் வரவே முடியாது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21ம் தேதி அன்னை மரி கோவிலில் தன்னையும் தன் கன்னிமையையும் காணிக்கையாக்கும் திருநாளை கொண்டாடுகிறோம்.

**3. மரியன்னை அமல உற்பவி.** (திருத்தந்தை 9ம் பயஸ் டிசம்பர் 8, 1854)

அமல உற்பவி என்பது இயேசுவின் தாயாகிய மரியன்னைக்கு அளிக்கப்படுகின்ற சிறப்புப் பெயரும் மரியா பிறப்பு நிலையிலேயே பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார் என்ற மறையுண்மையை வெளிப்படுத்தும் போதனையும் ஆகும். இந்த மறையுண்மையை கத்தோலிக்கத் திருச்சபை அறிக்கையிடுகிறது. மரியன்னையின் கருவறை இறைமகன் இயேசுவின் முதல் நற்கருணை பேழை அல்லவா? அப்படியானால், இறைவனைக் கருவில் சுமக்கும் அன்னையையும் தூய்மையான பெண்ணாகத்தானே இறைவன் தேர்ந்தெடுத்திருப்பார். இறையன்னை மரியா பிறப்புநிலை பாவமின்றி (ஜென்மப் பாவம்) உற்பவித்தார் என்ற அமல உற்பவ நம்பிக்கை 11ம் நூற்றாண்டில் தோன்றியது. கி.பி. 1050ல் கூடிய வெச்செல்லி சங்கத்தில் மரியாவின் அமல உற்பவத்துக்கான விழாவை திருத்தந்தை 9ம் லியோ பரிந்துரை செய்தார். கி.பி. 1166ம் ஆண்டு பைசாந்தியப் பேரரசு முழுவதும் மரியாவின் அமல உற்பவ விழாவைக் கொண்டாடுமாறு பேரரசர் முதலாம் மனுவேல் கொம்னேனொஸ் ஆணையிட்டார். கி.பி. 1708ம் ஆண்டு திருத்தந்தை அமல உற்பவத் திருநாளை கடன் திருநாளாக அறிவித்தார். கி.பி. 1854ம் ஆண்டு திருத்தந்தை 9ம் பயஸ் அவர்கள் மரியாவின் அமல உற்பவத் தன்மையை திருஅவையின் விசுவாசக் கோட்பாடாக அறிவித்தார். கி.பி. 1858ல் லூர்து நகரில் பெர்னதத்துக்கு காட்சியளித்த அன்னை மரியாள் 'நாமே அமல உற்பவம்' என்று கூறி திருஅவையின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். யாக்கோபு நற்செய்தியின் முதல் 5 அதிகாரங்கள் அன்னை மரியாவின் அமல உற்பவத்தை தெளிவாக விளக்குகிறது. முதிர்ந்த வயதில், குழந்தை பாக்கியம் இல்லையென ஏங்கிய புனித சுவக்கின் அன்னம்மாள் 40 பகலும் 40 இரவும் பாலைவனத்தில் தங்கி இறைவனிடம் உண்ணா நோன்பிருந்து இடைவிடாது செபித்ததின் பலன், கருவிலே உற்பவிக்கும்போதே ஜென்மப் பாவமில்லாத பெண்ணாக குழந்தை மரியாள் அவதரித்தார். டிசம்பர் 8ம் தேதி அமல உற்பவத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

**4. மரியன்னையின் விண்ணேற்பு** (திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் (பயஸ்) (1950)

மரியன்னை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். மரியன்னையின் விண்ணேற்பைக் குறித்து சொல்லப்பட்ட செய்தி : பாவத்தின் சம்பளம் மரணம். எனவே, அன்னை மரியாள் சுகவீனத்தின் காரணமாக மரணத்தைத் தழுவவில்லை. அன்னை மரியா தனது தாயின் கருவிலே பாவக் கறையில்லாமல் பிறந்தார். ஆண்டவரின் தூதரால் 'அருள் மிகப் பெற்றவளே' (லூக்கா 1 : 28) என அழைக்கப்பட்டாள். இறைமகனைத் தன்னுடைய உதிரத்தில் தாங்கும் பேறுபெற்றாள். இறைவனுக்குகந்த வாழ்க்கை வாழ்ந்தாள். இயேசுவின் தலை சிறந்த சீடத்தியாக வாழ்ந்தார். இறைவனை முகமுகமாய் தரிசிப்பதற்காக அன்பின் மிகுதியால் மரணத்தைத் தழுவினார். கடவுள் அன்னை மரியாவை உடலோடும் ஆன்மாவோடும் எடுத்துச் சென்று மூவுலக ராணியாக முடி சூட்டி என்றென்றும் மூவொரு கடவுளோடு வாழ்கின்றார். மரியன்னையின் இறப்பையும், இறந்தபிறகு என்ன ஆனார் என்பது குறித்தும் வானதூதர் மரியன்னைக்குக் காட்சி தந்து முன்னறிவித்தார். மரியன்னையின் இறப்புச் செய்தியைக் கேட்டு புனித தோமாவைத் தவிர எல்லா சீடர்களும் வந்தார்கள். புனித தோமா, நான் இறந்த மரியன்னையின் உடலைக் கண்டால் ஒழிய எதையும் நம்ப மாட்டேன் என்றார். மரியாவின் கல்லறையைத் திறந்து பார்த்தபொழுது மரியன்னையின் உடல் இல்லாததைக் கண்டு அவர் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அனைவரும் நம்பினார்கள். அன்னைமரி விண்ணகத்திற்கு சென்று கொண்டிருக்கும்போது அவரது இடைக்கச்சை புனித தோமையாரின் நம்பிக்கையை உறுதிப்படுத்த அவர் கரங்களில் வந்து விழுந்ததாகவும் பாரம்பரியம் கூறுகிறது. கால்சீதோன் பொதுச்சங்கத்தில் எருசலேம் ஆயர் புனித யுவனால் மரியன்னையின் நிகழ்வை எடுத்துரைத்தார். 8ம் நூற்றாண்டில் அயர்லாந்தில் தோன்றிய மன்றாட்டு மாலை விண்ணகத் தலைவி எனப் புகழ்கிறது. திருத்தந்தை முதலாம் ஆத்ரியன் கி.பி. 795ல் மரியன்னையின் விண்ணேற்பை திருச்சபையில் கொண்டாட ஆணையிட்டார். 1950ல் இறைத்தந்தை 12ம் பயஸ் (பத்திநாதர்) அன்னை மரியா விண்ணேற்பு அடைந்ததை கிறிஸ்தவ விசுவாச சத்தியமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். ஆகஸ்ட் 15ம் தேதி விண்ணேற்பு விழாவை திருஅவை முழுவதும் கடன் திருவிழாவாக கொண்டாடுகிறது.

திருமதி. ஜோ. **ரெஜினா கிரகோரி.**

# விமானம் பேசினால்



கடல் கடந்து இறக்கி விடுவாய்
என வந்தனரே – இறக்க விட்டாயே
உயர பறக்கத்தானே உன் இறக்கை –
உயராது விழுந்தாயே
காற்றில் பறக்கத்தானே உன் அமைப்பு
கருக்கிவிட்டாயே அனைவரையும்
கலர் கலராய் அமர்த்தப்பட்டனரே
கரிக் கட்டையாய் அடுக்கிவிட்டாயே
விழி திறந்த கனவுகளோடு நுழைந்தனரே
விழி மூடிய கனவுக்கும் நுழைவாயில் அடைத்தாயே
வான் பயணம் என நினைத்து வந்தனரே
வாழ்க்கை பயணத்தையே நிறுத்தி விட்டாயே
உலக அடையாளம் பெற நினைத்தனரே
உருவ அடையாளத்தையே உருக்கிவிட்டாயே
தொடரலாம் இது போன்ற கேள்விகள் எனை நோக்கி
குற்றம் என்மீதா – தெரியவில்லை ஆனாலும்
குறுகிப்போய் மன்னிப்புக் கேட்கின்றேன்
உயிரிழுந்து போனாரே, உறவிழுந்து போனாரே
என்னை மன்னியுங்கள் –
ஆனாலும் உணர்ந்து கொள்ளுங்கள்
இயந்திரம் நான் – இறைவன் அல்ல
வெறும் பொருள் நான் – பரம்பொருள் அல்ல
பறக்க வைக்கத்தான் படைக்கப்பட்டேன்
பலியாக்க அல்ல – இன்று
பழி விழுந்த காரணத்தால் பதிலுரைக்கின்றேன்
என் பதிவையும் உரைக்கின்றேன்
மரணம் –
சாதிவாரி, இனவாரி, மொழிவாரி, நிறவாரி
கணக்கெடுப்பெல்லாம் நடத்துவதில்லை
மொத்தமாக வாரிக்கொள்கின்றது
அமரும்போதுதான் முதல் வகுப்பு, பிற வகுப்பு
அமரராகும்போது மொத்தத்தில் குவிப்பு
அவ்வளவே (வாழ்க்கை) பயணம்
யாரோ எங்கோ இறப்பு என்றவுடன்
இதயம் கலங்கி அழுகின்றீர்களே – இதன் மூலம்
மனிதம் மரணிக்கவில்லை என்பதை பிரகடனப்படுத்துகின்றீர்கள்
சில நேரங்களில் ஏன் அதை பிளவுபடுத்துகின்றீர்கள்
வயலுக்கான நீரை மறித்துவிட்டு
விறகுகளுக்கு நீர் தெளித்து பயன் இல்லையே
பிளவுகளிலிருந்து பிரிந்து வாருங்கள்
மனிதத்தை பிரிந்து செல்லாது பிடித்து வாழுங்கள்
இந்த நாள் மட்டுமல்ல எல்லா நாளும் இனிதாகட்டும்

விமானத்தின் பதிவாய் திரு. **ஜோசப் ஜெரால்டின்**



## புனித வின்செந்திய சபையின் செயல்பாடுகள்

'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு
நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' (மத். 25 : 40)

**தத்து குடும்பங்கள்**

தத்து குடும்பங்கள் எண்ணிக்கை -10 மாதம் தோறும் 10 தத்து குடும்பங்கள் பெறும் உதவிதொகை ரூ.13500/ மாதம்தோறும் ஜானகிபுரம் கிராமத்திற்கு வழங்கப்படும் உதவி ரூ.3500/மாதம் தோறும் ஒட்டியம்பாக்கம் கிளைச்சபைக்கு வழங்கப்படும் உதவி ரூ.2000/

**மருத்துவ உதவிகள்**

